**செய்தி வெளியீடு** **நாள் : 28.1.2025**

**சென்னை, தரமணி, அண்ணா பல்கலைக்கழக கட்டிடக்கலை மற்றும் திட்டமிடல் கல்லூரியில் சி.எம்.டி.ஏ. சார்பில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பி.பிளான் மற்றும் எம்.பிளான் பட்டப் படிப்பிற்கான புதிய கட்டடம் கட்டுவதற்கான இடத்தினையும் மற்றும் பாரதி மகளிர் கல்லூரியில் புதிதாக உட்புற கலையரங்கம் (Indoor Auditorium) கட்டுவதற்கான இடத்தினையும் மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் மற்றும் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் அவர்கள் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு, களஆய்வு மேற்கொண்டனர்.**

•••••••••

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (28.01.2025) சென்னை, தரமணி, அண்ணா பல்கலைக்கழகத்தின் கட்டிடக்கலை மற்றும் திட்டமிடல் கல்லூரியில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் **ரூ.20 கோடி மதிப்பீட்டில்** கட்டப்படவுள்ள பி.பிளான் மற்றும் எம்.பிளான் வகுப்பறைகள், ஆய்வுக்கூடங்கள் மற்றும் நூலகங்கள் அடங்கிய புதிய கட்டடம் கட்டுவதற்கான இடத்தினையும் மற்றும் சென்னை, பிராட்வே சாலையிலுள்ள பாரதி மகளிர் கல்லூரியில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் புதிதாக உட்புற கலையரங்கம் (Indoor Auditorium) கட்டுவதற்கான இடத்தினையும் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் மற்றும் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் அவர்கள் ஆகியோர்** நேரில் சென்று பார்வையிட்டு, களஆய்வு மேற்கொண்டனர்.

சென்னை, தரமணி, அண்ணா பல்கலைக்கழகத்தின் கட்டிடக்கலை மற்றும் திட்டமிடல் கல்லூரியில் திட்டமிடல் துறை, கட்டிடக்கலை மற்றும் திட்டமிடல் பள்ளி வளாகம், 1964 ஆம் ஆண்டு முதல் திட்டமிடல் முதுகலை பட்டப்படிப்பை வழங்கி வருகிறது. சமீபத்தில் 2022 கல்வியாண்டு முதல் திட்டமிடல் இளங்கலை திட்டம் (B.Plan) துறையால் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் திட்டமிடல் கல்வியை மேலும் விரிவுபடுத்தும் நோக்கத்துடன், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் (CMDA) மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநரகம் (DTCP) ஆகியவை நிதியுதவி வழங்கி, 2022 ஆம் ஆண்டு முதல் அண்ணா பல்கலைக்கழகத்தின் கட்டிடக்கலை மற்றும் திட்டமிடல் வளாகத்தின் திட்டமிடல் துறையில் B.Plan திட்டத்தை தொடங்கின. தற்போது, அண்ணா பல்கலைக்கழகத்தில் புதிதாக தொடங்கப்பட்ட B.Plan திட்டத்தில் 3 தொகுதி மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

மேலும், தமிழ்நாட்டிற்கான போக்குவரத்துத் திட்டமிடலின் முக்கியத்துவத்தையும், போக்குவரத்து அமைப்பு உருவாக்குநர்கள் மற்றும் இயக்குபவர்களுக்கு திறன் மேம்பாட்டை வழங்குவதையும், அடுத்த தலைமுறைக்கு போக்குவரத்து முறைகளை மேம்படுத்துவதற்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை எளிதாக்குவதையும் புரிந்து கொண்டு, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் 2024-2025 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் அறிவிப்பின்போது, தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டத்தில் ஒரு அறிவிப்பை வெளியிட்டார்.

“B.Plan மற்றும் M.Plan ஆகிய இரு திட்டங்களுக்கும், ரூ. 20 கோடி செலவில் G + 3 தளங்களைக் கொண்ட புதிய கட்டடம் கட்டப்பட்டு, இந்த இரண்டு திட்டங்களுக்கும் வகுப்புகள், அண்ணா பல்கலைக்கழகம், தரமணி வளாகத்தில் நடத்தப்படும்” என அறிவித்தார்.

அதனைத் தொடர்ந்து இன்று (28.01.2025) சென்னை, தரமணி, அண்ணா பல்கலைக்கழகத்தின் கட்டிடக்கலை மற்றும் திட்டமிடல் கல்லூரியில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள பி.பிளான் மற்றும் எம்.பிளான் வகுப்பறைகள், ஆய்வுக்கூடங்கள் மற்றும் நூலகங்கள் அடங்கிய புதிய கட்டடம் கட்டுவதற்கான இடத்தினை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் மற்றும் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் அவர்கள் ஆகியோர்** நேரில் சென்று பார்வையிட்டு, கள ஆய்வு மேற்கொண்டனர்.

இதற்கு முன்னர், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** சென்னை, துரைப்பாக்கம், **கண்ணகி நகரில்** சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் **ரூ.5 கோடி மதிப்பீட்டில்** கட்டப்பட்டு வரும் **புதிய பல்நோக்கு மையத்தினையும்**, **ரூ.4.50 கோடி** மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் **நவீன சந்தையையும்** நேரில் சென்று பார்வையிட்டு, கட்டுமான பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின்போது மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன் அவர்கள், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்கள், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், கல்லூரிக் கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள், முதன்மை செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., அவர்கள், தொழில்நுட்ப கல்வி ஆணையர் திரு.த.ஆபிரகாம், இ.ஆ.ப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.அரவிந்த் ரமேஷ் அவர்கள், அண்ணா பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் ஜெ.பிரகாஷ் அவர்கள், மண்டலக் குழுத்தலைவர்கள் திரு.மதியழகன், திரு.துரைராஜ், திரு.ஸ்ரீராமுலு, தலைமை திட்ட அமைப்பாளர் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைமை பொறியாளர் திரு.கிருஷ்ணசாமி, பொதுப்பணித்துறை (தொழில்நுட்பக் கல்வி) தலைமைப் பொறியாளர் திரு.சுகுமாரன், கண்காணிப்பு பொறியாளர் திரு.ராஜமகேஷ்குமார், திட்டமிடல் கல்லூரியின் துறைத்தலைவர் முனைவர் பிரதீப் மோசஸ், பாரதி மகளிர் கல்லூரி முதல்வர் முனைவர் டி.கிளாடிஸ், மண்டல அலுவலர் திருமதி.பரிதா பானு, மாமன்ற உறுப்பினர் திரு.ஏகாம்பரம், மாநகராட்சி மற்றும் சி.எம்.டி.ஏ அலுவலர்கள் உடனிருந்தனர்.